**திவுலப்பிட்டி பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து திவுலப்பிட்டி பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 977,751 பெறுமதியான நூலக புத்தகங்கள் இரு தடவை கணக்கீடு செய்யப்பட்டமையினால் நூலக புத்தக கணக்கு மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்பு கணக்கின் மீதி என்பன அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்யப்படும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 18 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | காணி மதிப்பீடு செய்யப்பட்டு மூலதனமாக்கப்பட வேண்டும். | காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான கட்டிடங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 2,445,431 தொகை மற்றும் மீளாய்வாண்டில் | நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 140,300 பெறுமதியான அச்சிடல் இயந்திரம் என்பன மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | களஞ்சிய கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி சீராக்கும் போது ரூபா 221,953 வரவு மீதியொன்று அதிகரித்தும் ரூபா 251,942 செலவு மீதியொன்று குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | 2004 முதல் 2009 வரை வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 142,336 தொகையான காசோலை நானாவித வைப்புக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கண்டறிந்து தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 14 கணக்கு விடயங்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 104,660,892 ஆக இருந்த போதிலும், பட்டோலையின் பிரகாரம் அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 101,147,094 ஆனமையால் ரூபா 3,513,798 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**1.3.3 கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் காணப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 99,987,399 கூட்டுத்தொகையான 05 கணக்குகளுக்குரிய கடன்பட்டோர், ஊழியர் கடன், பொதுக் களஞ்சியம் மற்றும் மின்சார | சுட்டிக்காட்டப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட | 2020 இன் இறுதிக் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | களஞ்சிய பதிவேடுகள் மற்றும் பட்டோலைகள் என்பன சமர்ப்பிக்கப்பவில்லை. | வேண்டும். | |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371 | 03 வருடங்களை விஞ்சிய செயல்நிமித்த உப கட்டுநிதி ரூபா 6,623,255 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 13,467,421 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் 2007 பெப்ரவரி 09 ஆம் திகதிய 1484 ஆம் இலக்க வர்த்தமானி | பிரதேச சபை அதிகார பிரதேசமும் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டு வரையிலும் ஆதனவரி 1124 வதிவிட ஆதனங்களில் இருந்தும், 1701 வியாபார ஆதனங்களில் இருந்தும் மற்றும் 136 ஏனைய ஆதனங்களில் இருந்தும் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புதிய மதிப்பீடு வழங்கப்பட்டதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகள்

### (அ) பெறவேண்டிய மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எரிபொருள், வேலைகள் மற்றும் ஏனைய முற்பண மீதிகள் முறையே ரூபா 1,508,186 தொகை, ரூபா 5,078,175 மற்றும் ரூபா 35,795 ஆக இருந்தது. இந்த நிலுவை மீதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட முறையே ரூபா 1,308,186 தொகை, ரூபா 3,066,753 தொகை, ரூபா 7,018 மற்றும் 5 – 10 வருடங்களுக்கு இடையே முறையே ரூபா 200,000 தொகை, ரூபா 2,011,422 மற்றும் ரூபா 28,777 ஆக இருந்தது. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த தீர்க்கப்படாத எரிபொருள் முற்பணம், வேலை முற்பணம், ஏனைய முற்பணம் என்பன 2006 – 2015 காலப் பகுதிக்குரியதாக இருந்தமையால், முன்னர் நடவடிக்கை எடுக்காதிருந்தமையாலும் தற்போது ஆவணங்கள் இன்மையினாலும் முற்பணத்தை தீர்ப்பதற்கு முடியாதிருந்தது. |
| (ii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதியில் 2 – 3 வருடங்களுக்கு இடையே ரூபா 5,649,345 மற்றும் 01 வருடத்திற்கு குறைவான ரூபா 42,772,256 ஆக இருந்தது. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

### (ஆ) செலுத்தவேண்டிய மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதியில் 3 – 5 வருடங்களுக்கு இடையே ரூபா 10,177,987 தொகை, 2 – 3 வருடங்களுக்கு இடையே ரூபா 5,042,855 மற்றும் 01 வருடத்திற்கு குறைவான ரூபா 24,791,417 ஆக இருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

| | | |
|---|---|---|
| (ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளச்செலுத்த வேண்டிய வைப்பு மீதியில் 01 வருடத்தை விட குறைவான ரூபா 1,637,145 தொகையும், 02 – 05 வருடங்களுக்கு இடையே ரூபா 7,467,280 தொகை மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 4,483,613 ஆக இருந்தது. | செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,962,179 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 40,618,153 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 121,102 தொகையான மதிப்பிழந்த காசோலைகள் இனங்காணப்பட்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட் வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 9,407,778 | 14,690,393 | 13,592,787 | 1,188,492 | 10,150,985 | 10,521,241 | 10,439,903 | 81,338 |
| (ii) | வாடகை | 7,294,154 | 7,723,357 | 7,504,106 | 582,351 | 6,676,303 | 6,967,641 | 6,954,734 | 12,906 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,827,148 | 1,896,150 | 1,896,150 | - | 1,564,544 | 1,925,064 | 1,925,064 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 79,853,430 | 81,783,723 | 81,779,487 | - | 58,813,707 | 65,529,022 | 65,529,022 | - |
| | | 98,382,510 | 106,093,623 | 104,772,530 | 1,770,843 | 77,205,539 | 84,942,968 | 84,848,723 | 94,244 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ஆதனவரி நிலுவை மீதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 22,990 தொகை, 5– 10 வருடங்களுக்கு இடையே ரூபா 21,800 தொகை, 3–5 வருடங்களுக்கு இடையே 19,228 தொகை, 2–3 வருடங்களுக்கு இடையே ரூபா 34,714 மற்றும் 01 வருடத்திற்கு குறைவான ரூபா 1,076,179 ஆக காணப்பட்டது. | நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆதனவரி நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | ஆதனங்களின் மெய்மெய்யாய்வின் பிரகாரம் சபையின் மொத்த ஆதனங்களின் எண்ணிக்கை 57,822 ஆக இனங்காணப்பட்டிருந்த போதிலும், 2,961 ஆதனங்களில் இருந்து மாத்திரமே ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | புதிய வரி மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவித்திருந்த போதிலும், உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையினால் புதிய மதிப்பீடு வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 1946 இன் 30 ஆம் இலக்க வாடகை மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஆதனவரி 05 | புதிய வரி மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு | புதிய மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்படவில்லை. |

| | |
|---|---|
| வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், திவுலபிட்டி மற்றும் கொடதெனியாவ உப அலுவலகங்களில் 1994 இன் போதும் கெஹெல்எல்ல உப அலுவலகத்தில் 2010 ஆம் ஆண்டின் போதும் இறுதி தடவையாக ஆதனவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கெஹெல்எல்ல உப அலுவலகத்தில் 10 வருடங்களை விட பழைய வாடகை நிலுவை ரூபா 327,098 ஆக காணப்பட்டது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்ற வேண்டிய ரூபா 11,035,000 பெறுமதியான 05 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | தேவையின் பிரகாரம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | நிதி போதியளவில் இல்லாமையினால் அமுல்படுத்தப்படவில்லை. |

**(ஆ) கைவிடப்பட்ட இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் (நர்ட்) ஆலோசனையில் 2014 ஆம் ஆண்டில் ரூபா 500,000 செலவில் உயிரியல் வாயு அலகொன்று சபை வளவில் அமைக்கப்பட்டு அதனை செயற்படுத்துவதற்காக சபையின் ஊழியர் ஒருவருக்கு ரூபா 6,000 கட்டணம் செலுத்தி நர்ட் நிறுவனத்தின் மூலம் பயிற்சியளிக்கப்பட்டிருந்தது. எனினும் உயிரியல் வாயு அலகிற்கு தேவையான குழாய்களை பதிப்பதற்காக பொருத்தமான இடமொன்று வழங்கப்படாமையினால் நர்ட் நிறுவனத்தின் செயற்திட்ட பட்டியலில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் 2020 மே 11 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்த்த பெறுபேறுகள் பெறப்படாமல் உயிரியல் வாயு அலகு கைவிடப்பட்டிருந்தது. | எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

**(இ) பொதுமக்கள் முறைப்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற 174 பொதுமக்கள் முறைப்பாடுகளில் 56 முறைப்பாடுகள் மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது. | முறைப்பாடுகளை தீர்ப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் முறைப்பாடுகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 04 நூலகர் பதவிகள், 03 வருமான பரிசோதகர் பதவிகள், ஒரு நூலக உதவியாளர் பதவி, 04 வேலைக்கள தொழிலாளர் பதவிகள், 02 சுகாதார தொழிலாளர் பதவிகள் மற்றும் கனரக வாகன இயந்திர செயற்படுத்துனரில் ஒரு பதவி என்பன வெற்றிடமாக காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நூலகர் வெற்றிடத்தை நிரப்புமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

(ஆ) **ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊழியர் கடன் மீதியில் காணப்பட்ட மரணமடைந்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற 12 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 21,508,178 தொகை மற்றும் இடம் மாற்றலாகிச் சென்ற 09 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 271,633 தொகை என்பன பல வருடகாலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது. | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிட முடியாத கடன் மீதி தொடர்பாக உள்ளுராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு பணம் தாமதமாக செலுத்தியமையினால் ரூபா 163,876 தொகையான மிகைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதும், அதில் ரூபா 158,784 தொகையை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு உரிய மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் போது மின்சார பிரிவின் கடமைகளுக்காக 03 டிமோ பட்டா வாகனங்கள் தனியார் நிறுவனத்திலிருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்டு ரூபா 2,488,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த வாகனங்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது அதிகார பிரதேசத்தில் பழுதுபார்க்கப்பட்ட வீதி விளக்குகள் தொடர்பான விபரங்களை கவனத்தில் கொள்ளாமல் பிரயாணம் செய்த வீதிகள் தொடர்பான விபரங்கள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வாகனங்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது பிரயாணம் செய்த வீதிகள் மாத்திரம் அன்றி நிறைவேற்றப்பட்ட வேலைகள் தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். | வாகனங்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது பழுதுபார்க்கப்பட்ட வீதி விளக்குகள் தொடர்பான விபரங்கள் கோவையிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச நிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட 06 வாகனங்கள் மற்றும் மேல்மாகாண சபையிலிருந்து வழங்கப்பட்ட வாகனம் என்பவற்றை உள்ளடக்கிய ரூபா 44,044,173 பெறுமதியான 07 வாகனங்கள் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குக் கிடைத்த வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5.2 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டில் ரூபா 581,697 தொகை செலவில் கொட்டதெனியாவ தெல்கொல்ல எஸ்டேட் இல் சனசமூக மண்டபம் நிர்மாணிக்கப்பட்ட போது இந்த சனசமூக மண்டபம் எந்தவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | சனசமூக மண்டபத்தை பயன்பாடுள்ள பணிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5.3 இருப்பு பற்றாக்குறை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் பொது களஞ்சிய இருப்பில் ரூபா 22,021,294 மற்றும் மின்சார களஞ்சிய இருப்பில் ரூபா 2,405,285 தொகையான இனங்காணப்படாத இருப்பு பற்றாக்குறையொன்று காணப்பட்டது. | உரிய ஆவணங்களின் பிரகாரம் பற்றாக்குறையை இனங்காண்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2012 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டு வரப்படுகின்ற வழுவாக இருந்ததுடன், தற்போது ஆவணங்கள் காணப்படாமையினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இந்துராகார கிராம உத்தியோகத்தர் பிரிவில் தூனகஹ கொடிகமுவ சார்ஸ்ல் ஒழுங்கை (ஆலை வீதி) சாந்த அவர்களின் கடை அருகிற்கு செல்கின்ற பாதைக்கு கொங்கிரீட் இடலின் கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் 18.78 மீற்றர் இற்காக ரூபா 191,959 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவு செய்யும் போது சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | வேலை அத்தியகட்சரின் அறிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட்டிருந்தது. |